புதுச்சேரி அரசு
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
காரைக்கால்

*****

நாள்: 02-01-2018.

## செய்திக்குறிப்பு

கட்டுபாடற்ற அதிக ஒலி எழப்பக்கூடிய ஒலிப்பான்கள், பட்டாசுகள் இதர கருவிகள் ஆகியவற்றை பயன்படுத்த உச்சநீதிமன்றம் கட்டுப்பாடுகள் விதித்துள்ளது. அதன்படி ஒலிப்பான்கள் மற்றும் வெடி வெடிப்பது என்பது காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையே செய்ய வேண்டும் இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை ஒலி எழப்பக்கூடிய ஒலிப்பான்கள் ஒலிக்கக்கூடாது வெடி பட்டாசுகள் ஏதும் வெடிக்கக்கூடாது அதாவது பணடிகை கொண்டாடங்கள் மற்றும் பொது கொண்டாடங்கள், பொழுதுபோக்கு கொண்டாடங்கள் மகிழ்ச்சிகரமாக அமைய உச்சநீதிமன்றத்தின் ஆணையின் படி கீழ்க்கண்ட வழிகாட்டுதல்களை மக்கள் கடைபிடிக்க வேண்டுமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்துகின்றது.

1. பண்டிகை மற்றும் விழாக் காலங்களில் அதிக ஒலி மாசினை உருவாக்கக்கூடிய ஒலிப்பான்கள், பட்டாசுகளால் தற்காலிக செவிட்டித் தன்மையும், தொடர் ஒசை நிரந்தரமான செவிட்டித் தன்மையும் ஏற்படுத்தக் கூடியது.

2. ஒலி எழுப்பக்கூடிய ஒலிப்பான்கள் மற்றும் ஒலி மாசினை உருவாக்கக்கூடிய பட்டாசு இரவு 10 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை கண்டிப்பாக பயன்படுத்தவேண்டாம் எனவும்

3. குடியிருப்பு பகுதியில் ஒலி எழுப்பக் கூடிய கட்டுமான இயந்திரங்களை இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை பயன்படுத்தவேண்டாம் எனவும்

4. ஒலி அளவானது 125 டெசிபல் அல்லது 145 டெசிபல்க்கு அதிகமாக ஒலி மாசு ஏற்படுத்தும் ஒலிப்பான்கள், பட்டாசுகளை உபயோகிக்க வேண்டாம் எனவும்

5. குறிப்பாக மருத்துவமனைகள், நீதிமன்ற வளாகங்கள், கல்விக்கூடங்கள் இருக்குமிடங்களில் 100 மீட்டர் சுற்றளவிற்கு இவ்வகையான ஒலிப்பான்கள் மற்றும் பட்டாசுகள் பயன்படுத்த முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது எனவும்.

6. மீறுபவர்கள் மீது உச்சநீதிமன்றத்தின் ஆணையின் படியும் சுற்றுசூழல் பாதுகாப்பு சட்டம் 1986 கீழும் நடவடிக்கை எடுக்கப்படும்.

4/1/18

( இர. கேசவன், இ.ஆ.ப)
மாவட்ட ஆட்சியர்
காரைக்கால்

பெறுதல்

1.சார்பு ஆட்சியர்( வருவாய்), காரைக்கால் } தகுந்த மேல்
2.முதுநிலை காவல் கண்காணிப்பாளார், காரைக்கால். } நடவடிக்கைக்காக.

நகல் பெறுநர்

செய்தி மற்றும் விளம்பரத் துறை, காரைக்கால்
- பொது மக்களுக்கு விரிவான விழிப்புணார்வு எற்படுத்தும் வகையிலும் விளம்பரபடுத்தும் வகையிலும் நடவடிக்கை எடுக்க பணிக்கப்படுகிறது.

4/1/18
Asst. P. R. O. to
COLLECTOR